முருகப்பெருமான் துணை

**மகான் புண்ணாக்கீசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.03.2024,** திங்கட்கிழமை

1. ஞான குருவே அரங்கா போற்றி
நம்பிக்கையூட்டி மக்களை மீட்க
ஞான சபை படைத்த தேசிகா
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது சேல் திங்கள்
குறைவிலா வியதிகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 12 ம் நாள், 25.03.2024, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் புண்ணாக்கீசர் யானும்
துல்லிய ஆசிதனை உலகநலம் வேண்டி
3. வேண்டியே ஓங்கார குடிலில்
வினவிட தொடர்பு கூட்டி
தொண்டர்களாகி அரங்கனிடம்
தீட்சை ஏற்று வருக
4. வருகவே வினைகள் விலகி
வருங்காலம் அறியும் ஞானமும்
தருகின்ற குணமும் பக்குவமும்
தவராஜன் ஆசிஅருளால் கிட்டும்
5. கிட்டவே அன்னதான சேவையை
குறைவிலா நித்ய சேவையாக
தப்பாமல் ஏற்று வருவதுடன்
தவராஜன் கொள்கை தன்னை
6. தன்னையே வாழ்வின் அம்சமாக
தனிவழிகாட்டலாக ஏற்று
அண்ணல் தரும சாலைகளை
அகிலமெங்கும் கிளைகளாக மாற்றி
7. மாற்றியே மாதருமம் வளர்க்க
மக்களெல்லாம் தருமவான்களாக
ஆற்றல் பெருகி உலகோர்
ஆட்சி மாற்றம் தருவர் அப்பா

8. அப்பனே அரங்கன் உருவாக்கும்
ஆன்மீக அரசியல் களம்
தப்பாமல் மக்களிடை தவமாக
தனிப்பெருஞ் சக்தியாகப்பரவி
9. பரவியே ஞானவான்கள் தானும்
பயந்து ஒதுங்கா உலகத்தில்
திறம்பட திடம்பட களம் காண
தேர்தல் களம் வரும் காலமதில்
10. காலமதில் ஞானவான்கள் மூலம்
கண்டுரைப்பேன் ஞானிகளே போட்டியிட
கோலமதாய் அநீதி முடிவுற்று
குருபரன் செயல்பட உலகில்
11. உலகினில் ஞானிகள் தலைமை
உருவாகி ஞானிகள் ஆட்சி
வளம்தரும் ஞான ஆட்சியாக
வையகம் கண்டடைய நேரும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—